## سُوْرَةُ الْعَصْرِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَلٰثُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالْعَصْرِ ۙ﴿١﴾ اِنَّ الْاِنْسَانَ لَفِيْ خُسْرٍ ۙ﴿٢﴾ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَ
عَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ۬ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٣﴾ ع ٣ ١ ٢٨

## سُوْرَةُ الْهُمَزَةِ مَكِّيَّةٌ وَّهِيَ تِسْعُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَيْلٌ لِّكُلِّ هُمَزَةٍ لُّمَزَةِ ۙ﴿١﴾ الَّذِيْ جَمَعَ مَالًا وَّعَدَّدَهٗ ۙ﴿٢﴾
يَحْسَبُ اَنَّ مَالَهٗۤ اَخْلَدَهٗ ۚ﴿٣﴾ كَلَّا لَيُنْۢبَذَنَّ فِي الْحُطَمَةِ ۫ۖ﴿٤﴾ وَمَاۤ
اَدْرٰىكَ مَا الْحُطَمَةُ ؕ﴿٥﴾ نَارُ اللّٰهِ الْمُوْقَدَةُ ۙ﴿٦﴾ الَّتِيْ تَطَّلِعُ عَلَى
الْاَفْـِٕدَةِ ؕ﴿٧﴾ اِنَّهَا عَلَيْهِمْ مُّؤْصَدَةٌ ۙ﴿٨﴾ فِيْ عَمَدٍ مُّمَدَّدَةٍ ﴿٩﴾ ع ٩ ١ ٢٩

## سُوْرَةُ الْفِيْلِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِاَصْحٰبِ الْفِيْلِ ؕ﴿١﴾ اَلَمْ يَجْعَلْ
كَيْدَهُمْ فِيْ تَضْلِيْلٍ ۙ﴿٢﴾ وَّاَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا اَبَابِيْلَ ۙ﴿٣﴾
تَرْمِيْهِمْ بِحِجَارَةٍ مِّنْ سِجِّيْلٍ ۙ﴿٤﴾ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّاْكُوْلٍ ﴿٥﴾ ع ٥ ١ ٣٠

அத்தியாயம் : 103

## அல் அஸ்ர் _ காலம்

வசனங்கள் : 3 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. காலத்தின் மீது சத்தியமாக!
2. நிச்சயமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்_
3. விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம்செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களே அத்தகையோரைத்தவிர.

அத்தியாயம் : 104

## அல் ஹுமஜா _ புறம்பேசித்திரிதல்

வசனங்கள் : 9 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (பிறரைக்) குறைகூறி புறம்பேசித்திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான்.
2. இத்தகையவன் பொருளைச் சேகரித்து அதனை எண்ணிவைத்துக்கொண்டும் இருந்தான்.
3. நிச்சயமாக, தன் பொருள் தன்னை (என்றென்றும் உலகில்) நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணுகிறான்.
4. (பொருளைச் சேகரித்து வைத்துக்கொண்டு உலகில் அவனை நிலைத்திருக்கச் செய்யுமென்று எண்ணியிருந்தானே) அவ்வாறன்று! (அல்லாஹ்வின் மீது சத்தியமாக!) ஹுதமாவில் அவன் எறியப்படுவான்.
5. (நபியே!) "ஹுதமா" என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
6. எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லாஹ்வின் (நரக) நெருப்பு.
7. அது எத்தகையதென்றால், (தேகத்தில் பட்டவுடன்) இதயங்கள் மீது சென்றடையும் (காரணம் இதயங்கள் தான் தீய கொள்கைகளுக்கு இருப்பிடமாக இருந்தது).
8. நிச்சயமாக அது, அவர்களின் மீது (சூழ்ந்து) மூடப்பட்டதாய் இருக்கும்.
9. நீண்ட கம்பங்களில் (அவர்கள் கட்டப்பட்டிருப்பார்கள்).

அத்தியாயம் : 105

## அல்ஃபீல் _ யானை

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே! அப்ரஹாவின்) யானைக்காரர்களை உமதிரட்சகன் எவ்வாறு செய்தான் என்பதை நீர் தெரிந்திருக்கவில்லையா ?
2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் வீணாக்கிடவில்லையா ?
3. மேலும், அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங்கூட்டமாக தொடர்ந்தவையாக அவன் அனுப்பிவைத்தான்.
4. (கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை அவர்கள்மீது அவை எறிந்தன.
5. பிறகு, (கால்நடைகளால்) தின்னப்பட்ட வைக்கோல்களைப் போல் அவர்களை அவன் ஆக்கி (அழித்து) விட்டான்.